**கவனிக்க.**- 05.05.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.**- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2017 ஆம் ஆண்டிற்கான காலி மற்றும் பலப்பிட்டி நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2019 - 2017 මැයි මස 12 වැනි සිකුරාදා - 2017.05.12
2019 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 824 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 829 |


**கவனிக்க.**- குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு (திருத்தம்) சட்டமூலம் 2017, மே மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, யூன் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மே மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

821 - B81169 - 5,403 (2017/5)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

***5. யுத்த சேவைச் சலுகை :***

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

***8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :***

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவு III ஆம் தரத்தின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்காக மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

*விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உத்தியோகத்தர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிகளில் காணப்படும் 28 வெற்றிடங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின்கீழ் மத்திய அரசில் மற்றும் மாகாண அரசின்கீழ் சேவையில் ஈடுபடும் கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1. ***தகைமைகள்*** :

1.1 ***கல்வித் தகைமை :***

(அ) (i) *சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் ஏனைய இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;*

*மற்றும்*

(ii) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சகல பாடங்களிற்காகவும் திறமைச் சித்தியினைப் பெற்றிருத்தல் (பொது சாதாரண தரப் பரீட்சையைத் தவிர) ;*

*மற்றும்*

(iii) *விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டு விழாவில் மாகாண மட்டத்தில் (மாவட்டங்களுக்கிடையே) நடைபெறும் போட்டியில் 1 ஆவது அல்லது 2 ஆவது இடத்தைப் பெற்றிருத்தல், தேசிய விளையாட்டு விழாவில் 1, 2 அல்லது 3 ஆவது இடத்தைப் பெற்றிருத்தல், விளையாட்டுச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள தேசிய விளையாட்டுச் சங்கங்கள் மூலம் நடாத்தப்படும் தேசிய கிண்ணப் போட்டிகளில் 1, 2 அல்லது 3 ஆம் இடத்தைப் பெற்றிருத்தல் ;*

*அல்லது*

(ஆ) (i) *சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;*

*மற்றும்*

(ii) *தெற்காசிய போட்டிகளில் ஆசியப் போட்டி, பொதுநலவாய சபைப் போட்டி, ஒலிம்பிக் போட்டி அல்லது உலகக் கிண்ணப் போட்டிக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 1, 2 அல்லது 3 ஆம் இடங்களுக்காக பதக்கம் பெற்றிருத்தல்.*

1.2 ***தொழில்சார் தகைமைகள் :***

(i) *மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தேசிய தொழில்சார் திறமை (NVQ) மட்டம் (06) கொண்ட விளையாட்டுத் துறைக்குரியதான தொழில்நுட்ப டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;*

(ii) *விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் உரிய விளையாட்டுக்களுக்காக நடாத்தப்படும் 03 மாதங்களைவிடக் குறையாத பயிற்றுவிப்பாளர் பாடநெறியைத் தொடர்ந்து சித்தியடைந்திருத்தல் அல்லது விளையாட்டுச் சட்டத்தின்கீழ் உரிய துறைக்குரிய விளையாட்டுச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட பயிற்றுவிப்பாளர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல்.*

*1.3* ***அனுபவம் :***

(அ) மத்திய அரச சேவையின் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்காக விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் (08) வருடகால தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்து (08) சம்பளப்படி உயர்வுகளைப் பெற்றுள்ள விளையாட்டு உத்தியோகத்தராக இருத்தல் ;

(ஆ) மாகாண அரச உத்தியோகத்தர்களுக்காக விளையாட்டுத் துறைக்குரிய விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சமமான பதவியில் குறைந்தபட்சம் (08) வருடகால தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மாகாண அரச சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல்.

*1.4* ***உடற் தகைமை.*** - சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல், உளத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- முதலில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காக மத்திய அரசின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார். அவ்வாறு மத்திய அரசின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் வெற்றிடங்கள் காணப்படும் பட்சத்தில் மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவின்கீழ் தகைமைகளுக்கமைய எஞ்சிய வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

*1.5* ***ஏனைய தகைமைகள் :***

(i) நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
(ii) அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய தகைமைகளைப் பரிசீலனை செய்யும் தினத்திற்கு முன்னர் (08) ஆண்டுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை உயரிய செயற்சாதனையைக் காண்பித்திருத்தல்.
(iii) அண்மித்த (05) வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.
(iv) உரிய மட்டத்தில் ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.
(v) உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
(vi) மேற்கூறப்பட்ட தகைமைகளை சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**2. தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தும் நேர்முகப் பரீட்சை** :

| புள்ளி வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உயர்ந்தபட்ச புள்ளிகளின் அளவு | தேர்ந்தெடுப்பதற்காக கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளி அளவு |
|---|---|---|
| மேலதிக சேவை அனுபவம் | 30 | சம்பந்தப்பட்டதல்ல |
| மேலதிக கல்வி மற்றும் தொழிற்தகைமை | 25 | |
| விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் காண்பிக்கப்பட்ட திறமைகள் | 20 | |
| விளையாட்டுப் பயிற்றுவித்தல், போட்டி நடுவர்/ போட்டி ஒழுங்கமைப்பு தொடர்பான மேலதிக அனுபவம் | 20 | |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

* விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களுக்காக மீண்டும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

* தகைமைகளைப் பரிசீலனை செய்தல் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின்போது மேற்கொள்ளப்படும்.

* தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை தொடருக்கமைய மற்றும் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய விண்ணப்பதாரர்கள் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3. **மாதாந்தச் சம்பள அளவு**.- 2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் உப ஆவணம் I இற்கமைய இப்பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவு ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 (MN-3-2016) ஆகும். தங்களுக்குச் சம்பளம் செலுத்தப்படுவது அச்சுற்றறிக்கையின் உப ஆவணம் II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமையவாகும். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக்காலம் செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகின்றன.

4. **விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல்** :

4.1 விண்ணப்பதாரர்களினால் இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தாபனப் பொறுப்பாளர் ஊடாக 2017.06.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

4.2 விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் :

பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07.

4.3 விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளல்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

5. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழி மூலங்களுக்கிடையே ஒப்பீட்டு இன்மைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும் என்பதைக் கருத்திற்கொள்ளவும்.

6. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

6.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டது. ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் விடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்குட்பட வேண்டும்.

6.2 சேவை நிபந்தனைகள்.- சகல நியமனங்கள் தொடர்பிலும் அரச சேவை ஆணைக்குழு சபையின் இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் உரியதாகும்.

7. தாம் அறிந்தே சமர்ப்பிக்கும் தகவல்களில் ஏதேனும் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது விண்ணப்பதாரி தெரிந்தே ஏதேனும் ஒரு விடயத்தை மறைத்திருப்பதாகத் தெரியவரும் பட்சத்தில் இன்றேல் தகைமை அற்றவர் எனச் சேவையாற்றும் காலத்திற்குள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

எஸ். ஈ. ஆர். ரி. எம். எஸ். பி. பண்டார,
பணிப்பாளர் நாயகம்.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07.
2017, ஏப்பிறல் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்**

விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவு III ஆம் தரத்தின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்காக மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

| | |
|---|---|
| மத்திய அரசாங்கம் | |
| மாகாண அரச சேவை | |

(இங்கு தாங்கள் குறிப்பிடும் சேவைக்கு முன்னால் " ✓ " அடையாளம் இடவும்.)

1. முழுப்பெயர் :----.
2. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   உ-ம் : (GUNAWARDANA M. G. B. S. K.)
   (ஆங்கில பெரிய எழுத்துக்களில் நிரப்பவும்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. பால் :
   பெண்/ ஆண் :----.
5. நிரந்தர முகவரி :----.
6. அலுவலக முகவரி :----.
7. தொலைபேசி இலக்கம் :----.
8. வர்த்தமானி அறிவித்தலில் முதலாம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா ? :----.
9. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இல. | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இல. | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. தொழில் தகைமைகள் (உரிய சான்றிதழ்கள், உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கவும்) :----.

11. அனுபவம் :----.

12. தற்போது வகிக்கும் பதவி :----.

12.1 இப்பதவி அடங்குவது மத்திய அரச சேவைக்கா அல்லது மாகாண அரச சேவைக்கா என்பது தொடர்பாக குறிப்பிடவும் :----.

12.2 இப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.

12.3 இப்பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்ட திகதி :----.

12.4 2017.01.01 ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

12.5 தற்போது சேவையாற்றும் இடம் :----.

13. தாங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டனை பெற்று அல்லது தற்போது தங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதா ? ஆம்/ இல்லை :----.

13.1 ஆம் எனின் விளக்கவும் :----.

14. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் நான் சேவைக்குச் சேர்த்துக்கொள்வதற்குத் தகைமையற்றவராகவும் மற்றும் நியமனம் பெற்றதன் பின்னர் அது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவேன் என்பதையும் அறிந்துள்ளேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எவையேனும் தகவல்களைப் பின்னர் மாற்றியமைக்க மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. இவ்விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................. மத்திய அரசின்கீழ்/ மாகாண அரசின்கீழ் ............................................. அமைச்சு/ திணைக்களத்தில் .............................. பதவியில் சேவையாற்றுவதாகவும் 2017.01.01 ஆந் திகதிக்கு அண்மித்த (08 வருடங்கள் தொடர்ச்சியான

சேவைக்காலத்திற்குள் குற்றத்திற்கு (எச்சரிக்கை தவிர) ஏதேனும் ஒரு முறையில் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு அவர் உட்படவில்லை என்பதாகவும், அண்மித்த 05 ஆண்டுகளுக்குள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளதாகவும், உரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பதாகவும், இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படும்/ விடுவிக்கப்படுவதில்லை என்றும் அவர் என் முன்னிலையில் இவ்விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்டதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களம்/ நிறுவனம்/ பொறுப்பாளரின் கையொப்பம்,
(பதவி முத்திரை).

திகதி :----.

5-329

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை**.- இப்பரீட்சை 2017, ஓகத்து மாதம் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற்கு அமைய கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச்செய்வதற்கும் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :

(i) நியமனம் பெறும் உத்தியோகத்தர் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

**குறிப்பு**.- ஓய்வூதிய திட்டமுறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கு அமையவாகும்.

(iii) திறந்த ஆட்சேர்ப்பு முறையின்கீழ் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பரீட்சார்த்த காலப்பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பு முறையில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி எய்திருப்பது கட்டாயமாகும்.

(iv) அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்ந்துகொண்ட அரச கரும மொழிக்கு மேலாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை, சேவையில் சேர்ந்து 5 வருடத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(v) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கும் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

*4. **சம்பளத் திட்டம்.**- MN - 3 - 2016 - தொழில்நுட்ப உத்தியோகத்தர் III - ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 ரூபா 57,550 சம்பளப் படிமுறைகள் இத்தரத்திற்கு உரியதாகும். சம்பளம் வழங்கப்படுவது பொ. நி. சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமையவாகும்.) வகுப்பு III இல் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத் திட்டத்தின் மூன்றாம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.*

*5. **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 18 இற்கு குறையாமலும் 30 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*6. **கல்வித் தகைமைகள்.**- சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;*

*அத்துடன்*

*பிரயோக கணிதம், தூயகணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடக்கப்பட்டு விஞ்ஞான/ கணித துறைக்குரிய பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;*

*__தொழிற் தகைமைகள்.__- மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் (கட்டடப் பொறியியல் துறையிலான) டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;*

*அல்லது*

*கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் (கட்டடப் பொறியியல் துறையிலான) டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;*

*அல்லது*

*இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;*

*அல்லது*

*இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதியை (கட்டடப் பொறியியல் துறையிலான) வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி இருத்தல் ;*

*அல்லது*

*உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழை வழங்குகின்ற நிறுவனத்திடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகலவிதத்திலும் சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.*

*__உடற்தகைமை.__- பதவியில் கடமையை மேற்கொள்வதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன், உடற்தகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

***__ஏனைய தகைமைகள் :__***

(i) *சகல விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;*

(ii) *சகல விண்ணப்பதாரரும் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும் ;*

(iii) *சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பது என ஏற்றுக்கொள்வது விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகளையும் மற்றும் உரிய வயதெல்லை என்பவற்றை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் திகதி அன்று சகலவிதத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்து இருந்தால் மாத்திரமேயாகும்.*

7. **ஆட்சேர்ப்பு முறை**.- சகல ஆட்சேர்ப்புக்களும், உரிய சுற்றறிக்கைக்கு அமையவும் மற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற்கு அமையவும் மேற்கொள்ளப்படும்.

திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு உரிய சகல வினாப்பத்திரங்களிலும் 40% இனையோ அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பகாரர் திறமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகள் உறுதி செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

8. **பரீட்சை**.- இந்த எழுத்துமூலப் பரீட்சை வினாப்பத்திரங்கள் 02 இனைக் கொண்டமைந்ததாகும்.

| *பாடங்கள்* | *நேரம்* | *உச்சப் புள்ளி அளவு* | *சித்தி எய்தும் புள்ளி* |
|---|---|---|---|
| 1. மதிநுட்பப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை) | 1 மணித்தியாலம் | 100 | 40 |

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பதாரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சையின்போது சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

(iii) விண்ணப்பித்த மொழிமூலத்தை பரீட்சையின்போது எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் 400 ரூபா கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள தபால் அலுவலகத்தில் மாற்றத்தக்கவாறு தீவின் எப்பாகத்திலும் அமையப்பெற்றுள்ள தபால் பணிமனையில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் காசுக் கட்டளையினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும்.

(vi) *பாடத்திட்டம் :*

(அ) *மதிநுட்பப் பரீட்சை*.- (ஒரு மணித்தியாலம், மொத்தப் புள்ளிகள் 100) இதில் விண்ணப்பதாரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) பொதுப் பரீட்சை.- (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை) (ஒரு மணித்தியாலம், மொத்தப் புள்ளிகள் 100) :

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாட விடயங்களை உள்ளடக்கியதான வினாப்பத்திரம் :

(i) *அளவிடை மற்றும் சமப்படுத்துகை*.- சங்கிலி நில அளக்கை (chain sruveying), மட்ட அளக்கை (leveling), தியோட்டலைட் பயன்பாடு தொடர்பான அறிவு, எளிய மேசை அளக்கை (Plain table servey) தொடர்பான அறிவு

(ii) *கட்டடப் பொருள்*.- சீமெந்து, சுண்ணாம்பு மண், கல், நிறப்பூச்சு வகை, வார்னிஸ் வகை, பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி, கட்டடப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்ற நல்ல நிலையில் உள்ள பலகை வகைகளை இனங்காணும் ஆற்றல்.

(iii) *கட்டட நிர்மாணம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல்*.- அத்திவாரச் சுவர் கட்டல், பலகைக் கூரை, கூரையைத் தாங்கிநிற்கப் பயன்படும் இணைக்கப்பெற்ற உத்தரங்களின் ஆதாரக் கட்டுமானம் (Truss), முகடு, கொங்ரீட் ஆதாரக் கட்டுமானம் (beams) மற்றும் கொங்ரீட் முகடு/ அத்திவாரம்/ மட்டம் (levels)/ கைப்பிடியுள்ள படிக்கட்டு (stair-case) போன்றன அமையப்பெறும் முறை மற்றும் அமையப்பெறும் சந்தர்ப்பங்கள். அளவிடையைப் பெற்றுக்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், நிர்மாணங்கள் பொருட்டு தேவையான கட்டடப் பொருட்களின் அளவு மற்றும் ஊழியர் எண்ணிக்கை என்பவற்றை மதிப்பீடு செய்தல்.

(iv) கட்டமைப்பு (bending movements)/ கருத்திட்ட அதிகாரக் குறிப்பு.

(v) சேவைகள்.- மின்சாரம், நீர், மலசலகூட வசதிகள்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய முறை**.- (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/ 2" x 12" அளவிலான ஏ4 கடதாசியில் இரு பக்கங்களையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2017, யூன் மாதம் 12 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ஆம் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு** :

(i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளினையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்பும் போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. பரீட்சை நடாத்தப்படும் திகதி பத்திரிகையில் அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்தப்படும். விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை, உற்பத்தி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொள்க :

(அ) விண்ணப்பதாரரது முழுப்பெயர் ;

(ஆ) முகவரி ;

(இ) விண்ணப்பம் தபாலிலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபால் அலுவலகம்.

10. விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களின் நிழற்படப்பிரதியினை (Photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பதாரரது ஆளடையாளம்**.- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு (பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டு இருத்தல் வேண்டும்).

**பிழையான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய பரீட்சார்த்த தகைமையினை இரத்துச்செய்ய இடமுண்டு. விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது என தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையில் நின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமான பத்திரிகையில் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்தகர்களுக்கான விதிகள் அறிவுறுத்தல்கள் என்பவற்றின்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினைப் பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதும் பொருந்தாத் தன்மை காணப்படுமிடத்து சிங்கள மொழி மூல அறிவித்தலே ஏற்புடையதாகும்.

12. இவ்வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

டாக்டர் ஆர். எம். ஆரியதாஸ,
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
பேராதனை,
2017, ஏப்பிறல் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிராமியப் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**

***கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்***

*இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தர தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017*

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04

(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)

1. பெயர் :
 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
 (உதாரணம் : SILVA, B.A.)
 1.2 முழுப்பெயர் (தமிழில்) :----.
 1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. முகவரி :
 2.1 தனிப்பட்ட முகவரி :----.
 அலுவலக முகவரி :----.
 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.
 2.2 தொலைபேசி இல. :----.

3. 3.1 பால் :

ஆண்
பெண்

(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

 3.2 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.4 குடியியல் நிலை :

விவாகமானவர் : ☐
விவாகமாகாதவர் : ☐

(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை-
வருடம் :----.
மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை-
வருடம் :----.
மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.3 (அ) தொழிற்தகைமை பெறப்பட்ட நிறுவனம் :----.
(ஆ) தொழிற்தகைமை பெற்ற வருடம் :----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகத்தின் பெயர் :----.
காசுக்கட்டளை இலக்கம் :----.

பரீட்சைக் கட்டணமாக 400 ரூபாவை தீவின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு மாற்றக்கூடிய தபால் அலுவலகம், பேராதனை பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

***திணைக்களத் தலைவரினது சான்றிதழ் :***

இத்திணைக்களத்தில் .................................................. கடமை மேற்கொள்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................ ........ என்பவரால் தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும், இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை).

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

5-209

---

## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

### தொழில் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் (தரம் III) பதவிக்கான ஆட்சேர்ப்புக்குரிய திறந்த போட்டிப் பரீட்சை - 2017

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் (தரம் III) பதவிக்கு உள்ள சிங்கள மொழி மூல வெற்றிடங்கள் ஐந்திற்கும் (05), ஆங்கில மொழி மூல வெற்றிடங்கள் நான்கிற்கும் (04) இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **நியமனம்**.- தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழுள்ள தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தால் நடாத்தப்படும் எழுத்து மற்றும் தொழில்வாண்மைப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் தகுதி அடிப்படையில் வெற்றிடங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும்.

2. **தகைமைகள் :**

(i) க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களிலும் மேலும் இரு பாடங்களிலும் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

(ii) க. பொ. த. (உ. த.) பத்திரப் பரீட்சையில் (பொது அறிவு மற்றும் பொதுவான ஆங்கிலப் பாடங்கள் தவிர்ந்த) ஏதேனும் ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

2.1 ***தொழில் தகைமைகள்.***- மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறு மாதங்களுக்குக் குறையாத காலத்திற்குரிய சுருக்கெழுத்துப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சுப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சுப் பயிற்சிநெறிக்கான நிறுவனங்கள் பின்வருமாறு :

- தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்கு உரித்தான தொழில்நுட்பக் கல்லூரிகள் ;
- தேசிய தொழில் பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைக்குரிய பயிற்சி நிலையங்கள்
- தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்குரிய பயிற்சி நிலையங்கள்
- இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபைக்குரிய பயிற்சி நிலையங்கள்.

2.3 ***அனுபவம்.***- மேற்படி பயிற்சி நெறிக்குப் பின்னர் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறு மாத காலத்திற்கான செய்முறைப் பயிற்சியைப் பெற்றிருத்தல்.

2.4 ***ஏனைய தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த குணநலன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான அவசிய தகைமைகளை விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் தினத்தன்று எல்லா வகைகளிலும் முழுமையாகப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறைவாக இல்லாமலும், 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்புக்கான நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

4.1 இப்பதவி நிரந்தரமானதாகும். இப்பதவிக்கான ஓய்வூதியத் திட்டம் பற்றி எதிர்காலத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் கொள்கைகளுக்கு அலுவலர் உட்படுதல் வேண்டும்.

4.2 இந்த நியமனம் மூன்று (03) வருடங்களுக்குத் தகுதிகாண் காலத்திற்கு உட்படும்.

4.3 III ஆம் வகுப்பில் நியமிக்கப்பட்டதன் பின்னர் மூன்று (03) வருட காலம் முடிவடைவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

4.4 அரச நிருவாகச் சுற்றறிக்கை இல. 01/2014 இன் பிரகாரம் மற்றும் அதனோடிணைந்த சுற்றறிக்கைகளினதும் பிரகாரம் பதவியில் சேர்ந்து ஐந்து வருடங்களினுள், சேவையில் சேரும் மொழி மூலத்திற்கு மேலதிகமாக மற்றைய அரச மொழியிலும் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அரச மொழி மூலம் அல்லாத வேறு மொழி மூலம் சேவவையில் சேருபவர் தகுதிகாண் காலத்தினுள் உரிய அரச மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

4.5 அரச சேவைக்குரிய பொது நிபந்தனைகளுக்கும், அரச சேவைகள் ஆணைக்குழுவின் விதிகள், நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக்கோவை என்பவற்றின் ஏற்பாடுகளுக்கும், அவற்றுக்குச் செய்யப்படும் திருத்தங்களுக்கும், திணைக்களத்தின் மற்றைய கட்டளைகளுக்கும், 2013.04.11 ஆந் திகதிய அரச சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளிலுள்ள நியதி நிபந்தனைகளுக்கும், அந்த நியதி நிபந்தனைகளுக்கு எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் அமைவாகத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர், சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்புப் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

4.6 கொழும்பு 5, நாராஹேன்பிட்டவிலுள்ள தொழில் திணைக்கள தலைமை அலுவலகத்தில் சேவையாற்றுதல் வேண்டும்.

5. ***சம்பள அளவுத்திட்டம்.- இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.***- ரூ. 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூபா 45,540 ஆகும். (2016-02-25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 03/2016 இன்படி MN 1 - 2016 சம்பளக் குழு, இச்சுற்றறிக்கையின் II ஆவது இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு இது வழங்கப்படும்.)

6. **ஆட்சேர்ப்பு முறை.**- இந்த திறந்த ஆட்சேர்ப்பானது எழுத்துப் பரீட்சையையும் தொழில் ரீதியான பரீட்சையையும் கொண்டுள்ளது. எழுத்துப் பரீட்சை முதலில் நடைபெறும். அதில் 40% இலும் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் தொழில் ரீதியான பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இது ஒரு போட்டிப் பரீட்சை ஆதலால், விண்ணப்பதாரி நியமனம் பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளையாவது பெறல் வேண்டும். வெற்றிடங்கள் அவற்றின் எண்ணிக்கையைப் பொறுத்து, மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கில் நிரப்பப்படும் (இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லாத் தகைமைகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பது கட்டாயமானதாகும்.)

பரீட்சையானது, சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும். பின்னர் மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. சிங்கள மொழி மூலம் விண்ணப்பிப்போர் சிங்களத்திலும் ஆங்கில மொழி மூலம் விண்ணப்பிப்போர்

ஆங்கிலத்திலும் தோற்றுதல் வேண்டும். சிங்கள மொழி மூலம் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் சிங்கள மொழி மூல பதவிகளும், ஆங்கில மொழி மூலம் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் ஆங்கில மொழி மூல பதவிகளும் நிரப்பப்படும்.

6.1 ***எழுத்துப் பரீட்சை :***

| *வினாப்பத்திரம்* | *புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* | *காலம்* |
|---|---|---|---|
| பொது அறிவும், மொழியும் (சிங்களம்/ ஆங்கிலம்) | 100 | 40 | 2 மணித்தியாலங்கள் |

(அ) ***எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்.***- *பொது அறிவும் மொழியும்.*- தேசிய மற்றும் சர்வதேச விடயங்களில் தற்போதைய நிலவரம் குறித்த விண்ணப்பதாரியின் பொது அறிவைப் பரிசோதித்தல்.

நேர அளவின் முக்கியத்துவத்துடன், தரப்படும் தலைப்புகளில் தேர்ந்தெடுக்கப்படும் தலைப்பொன்றில் கட்டுரையொன்று எழுதுதல் (பொருத்தமான விடயங்கள், மொழியிலான திறமை, சரியான இலக்கணம் மற்றும் எழுத்துப் பிழையின்மை ஆகியன கவனத்திற்கொள்ளப்படும்).

6.2 ***தொழில் ரீதியான பரீட்சை :***

| *விடயம்* | *புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|
| சுருக்கெழுத்தும் கனிணியில் தட்டச்சு செய்தலும் (சிங்களம்/ ஆங்கிலம்) | 100 | 40 |

(ஆ) தொழில் ரீதியான பரீட்சைக்கான பாடத்திட்டம் :

(i) சுருக்கெழுத்தும் கனிணியில் தட்டச்சுச் செய்தலும் - சிங்களம்.- வாசிக்கப்படும் ஒரு பந்தியை நிமிடத்திற்கு 70 சொற்கள் என்ற வகையில் ஐந்து (05) நிமிடத்தில் சுருக்கெழுத்தில் பதிவுசெய்து அதனை நிமிடத்திற்கு 7 சொற்கள் என்ற வகையில் கனிணியில் தட்டச்சுச் செய்தல்.

அல்லது

(ii) சுருக்கெழுத்தும் கனிணியில் தட்டச்சுச் செய்தலும் - ஆங்கிலம்.- வாசிக்கப்படும் ஒரு பந்தியை நிமிடத்திற்கு 80 சொற்கள் என்ற வகையில் ஐந்து (05) நிமிடத்தில் சுருக்கெழுத்தில் பதிவுசெய்து அதனை நிமிடத்திற்கு 7 சொற்கள் என்ற வகையில் கனிணியில் தட்டச்சுச் செய்தல்.

7. இப்பரீட்சைக்கான கட்டணம் 500 ரூபா ஆகும். இது தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் என்னும் பெயரில், இலங்கை வங்கி, பெலவத்தைக் கிளையின் 0071451995 என்ற இலக்கக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுப் பெறும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட வேண்டும். செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணங்கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமானதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் பிரகாரம் ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

(அ) விண்ணப்பத்தின் பகுதிகள் 1 இலிருந்து 3 வரை தாளின் முன்பக்கத்திலும் ஏனையவை ஏனைய பக்கங்களிலும் வரத்தக்கதாகத் தயாரிக்கப்பட வேண்டும். உரிய தகவல்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்பட வேண்டும்.

(ஆ) சிங்கள மொழியிலான விண்ணப்பத்தில் அதன் ஆரம்பத்தில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்திராத, உரிய திகதியில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிராத முழுமையாகவும் சரியான முறையிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். சரியான முறையில் இல்லாத விண்ணப்பங்களால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும், விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமானதாகும். இவ்வறிவித்தலுடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தையொத்த விண்ணப்பத்தைத் தயாரித்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும் என்பதுடன், அவ்வாறில்லாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

8.2 இந்தப் பரீட்சை 2017, ஆடி மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

8.3 உரிய வகையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பம் மூலம் விண்ணப்பித்த, இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள உரிய வகையில் உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பத்தை அனுப்பிய விண்ணப்பதாரிகள், உரிய தகைமைகளைக் கொண்டுள்ளனர் என்ற அனுமானத்தின் அடிப்படையில், தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி அவர்களால் இந்த திறந்த போட்டிப் பரீட்சையை எழுத அனுமதிக்கப்படுவர். விண்ணப்பதாரி ஒருவருக்கு இப்பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுதலானது, அவர் இப்பதவிக்கான எலலாத் தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்பட்டதாகக் கொள்ளப்பட முடியாததாகும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, இவ்வறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் உள்ளனவா எனப் பரீசிக்கப்படும்போது தேவையான தகவல்கள் வழங்கப்படாது உரிய தகைமைகளைக் கொண்டிருக்காதுவிடின், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

8.4 விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை.- பிழைகளின்றிப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பம் 2017.06.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், "பணிப்பாளர் அதிபதி, தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம், இல. 267, பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் (தரம் III) பதவிக்கான ஆட்சேர்ப்புக்குரிய திறந்த போட்டிப் பரீட்சை - 2017" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தபாலில் பிந்திக் கிடைக்கும் அல்லது காணாமற்போகும் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8.5 விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது ஒரு பாடசாலை அதிபரால், அல்லது சமாதான நீதிவான் ஒருவரால், அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரால், அல்லது சட்டத்தரணி ஒருவரால், அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரால், அல்லது முப்படைகளில் ஆணையிடும் அதிகாரி ஒருவரால், அல்லது 28,650 ரூபா அல்லது அதற்கு அதிகமான மாதச் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண சபையின் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால், அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதியால், அல்லது நாயக்க தேரரால், அல்லது வேறு மத வணக்கத்தலமொன்றின் மதகுருவால் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க மதப் பெரியாரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.- விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்யும் போது பிழையற்ற தகவல்கள் வழங்கப்படுவதில் முழுக்கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறைகளுக்கேற்ப விண்ணப்பதாரி எவராவது பொருத்தமற்றவரெனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீக்கப்படுவார். பிழையான தகவல் வழங்கப்பட்டதாகவோ அல்லது மாற்றம் செய்யப்பட்ட தகவல் வழங்கப்பட்டதாகவோ, நியமிக்கப்பட்டதன் பின்னர் தெரியவந்தால், விண்ணப்பதாரி அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- பரீட்சை நடைபெறும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி அவர்களால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவ்வாறான அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்ற முடியாது. அதில் தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்தி, அதனைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் விண்ணப்பதாரி கையளித்தல் வேண்டும்.

அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றி ஒரு பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்படும். அந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி, அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படும் விதத்தில் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி அவர்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். உங்களிடமிருக்கும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் பதிவுத்தபால் பற்றுச்சீட்டு ஆகியவற்றின் சான்றுப்படுத்திய பிரதிகளுடன் தொடர்புகொள்ளுதல் பொருத்தமானதாகும்.

10. பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் உங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி அவர்களால் இப்பரீட்சை தொடர்பாக வெளியிடப்படும் விதிமுறைகளுக்குப் பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும். அவற்றை மீறும் பரீட்சார்த்திகள் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி அவர்களால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாதல் வேண்டும்.

12. இதற்கான பரீட்சையை நடாத்துதல், நியமனங்களை வழங்குதல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் தொழில் ஆணையாளர் அதிபதி அவர்களது முடிவே இறுதியானதாகும்.

**குறிப்பு**.- இந்த அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றிற்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

தொழில் ஆணையாளர் அதிபதி.

தொழில் திணைக்களம்,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 5,
2017, ஏப்பிறல் 18.

[ ]
(அலுவலகப் பயன்பாட்டிற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

தொழில் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் (தரம் III) பதவிக்கான ஆட்சேர்ப்புக்குரிய திறந்த போட்டிப் பரீட்சை - 2017

## The Open Competitive Examination for the Recruitment to the Post of Stenographer (Grade III) in the Department of Labour - 2017

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
ஆங்கிலம் - 3 [ ] (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : SILVA A. B. D. P. A.)
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
1.4 தேசிய அடையாள அட்டை இல. : [ | | | | | | | | | ]
1.5 பால் :
பெண் - 1
ஆண் - 0 [ ] (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :----.
(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கிலத்தில் :----.
2.4 தொலைபேசி இல. : [ | | | | | | | | | ]

3. 3.1 விவாக அந்தஸ்து :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2 [ ] (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.2 பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3 விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் : வருடம் :----. மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை :
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் : வருடம் :----. மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழிற் தகைமை :

| பயிற்சிநெறி | காலம் | நிறுவனம் |
|---|---|---|
| | | |

6. அனுபவம் :

| பயிற்சிபெற்ற அல்லது சேவையாற்றிய நிறுவனத்தின் பெயர் | காலம் |
|---|---|
| | |

7. நீர் எப்போதாவது நீதிமன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா ?

ஆம் : ☐ இல்லை : ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக.)

ஆம் எனின், என்ன தவறுக்காக எந்த நீதிமன்றில் எவ்வாறான தண்டனை எனக் குறிப்பிடுக :----.

8. பரீட்சைக் கட்டணம் பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலங்கை வங்கிக் கிளையின் பெயர் :----.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :

இலக்கம் :----.

திகதி :----.

(iii) செலுத்திய தொகை :

| பற்றுச்சீட்டின் ஓரத்தை இங்கு அகற்றமுடியாத வகையில் ஒட்டுக. |
|---|

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரை உண்மையானவையும் சரியானவையுமென கௌரவத்துடன் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன். இதில் ஏதாவது தகவல்கள் குறைபாட்டுடனோ அல்லது பிழையாகவோ தரப்பட்டிருந்தால் அதனால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்ள உடன்படுகிறேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன எனவும் உறுதியளிக்கிறேன்.

(ஆ) தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி அவர்களால் இப்பரீட்சை தொடர்பாக வெளியிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்கி நடப்பதற்கும், இப்பரீட்சையின் விதிமுறைகளுக்கேற்ப நான் பொருத்தமற்றவரெனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீக்கப்படுவேன் என்பதை அறிவேன் எனவும், அவ்வாறானதொரு தீர்மானத்திற்கு உடன்படுவேன் எனவும் இத்தால் சம்மதிக்கிறேன்.

(இ) நான் இங்கு உறுதியளிப்பவை பிழையெனப் பின்னர் தெரியவந்தால் நியமனத்திற்குத் தகுதியற்றவராவேன் என்பதையும், நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள தகவலெதையும் பின்னர் நீக்கமாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவரைத் தனிப்பட்ட முறையில் நான் அறிவேன் எனவும், அவர் .......................................... ஆந் திகதியன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரது
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரது பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

## பதிவாளர் நாயக திணைக்களம்

### நொத்தாரிசு ஆரம்பப் பரீட்சை - 2016/ 2017

சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் நொத்தாரிசு கடமையினை மேற்கொள்வதற்காக நியமித்தலுக்காக பயிற்சியினைப் பெறும் பொருட்டு உறுதிமொழி எழுதுவினைஞராக (Artificial Clerk) ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை, 2017 ஆம் வருடம் ஓகத்து மாதம் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சை அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் நகரம் அவ் அட்டவணையில் உள்ளதன் பிரகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படாது எனவும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும். எந்நகரமும் பரீட்சை நிலையமாக நிறுவுவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரர் விண்ணப்பிக்காவிடின் அவர்களின் இரண்டாவது தெரிவாக தெரிவுசெய்யப்பட்ட நகரம் அல்லது கிட்டிய வேறு நகரத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படுவார். மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரம் அனைத்திலும் அல்லது அதிகமாக பரீட்சை மத்திய நிலையத்தினை நிறுவுவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரர் விண்ணப்பிக்காவிடின் பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.

(i) இந்தப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படல் சம்பந்தமாக அவரினால் நியமிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்படும் சட்டங்கள் வர்த்தமானியில் வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இந்தச் சட்டவிதிகளினை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அளிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவதற்கு வேண்டியேற்படும்.

3. இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் உறுதிமொழி பயிலுநர்களில் நூறு பேர்கள் இனவர்க்க அடிப்படை மற்றும் மாவட்ட அடிப்படையில் கௌரவ உள்நாட்டு அமைச்சரினால் நியமிக்கப்படுவார்கள்.

4. **தகைமைகள் :**

(I) ***கல்வித் தகைமைகள்.*** - பரீட்சார்த்திகள்,

(i) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத தடவைகளில் கணிதம், ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட ஆறு விடயங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், அப்பரீட்சையில் எந்தவொரு மூன்று விடயங்களில் சிறப்பு சித்திபெற்றிருத்தல் வேண்டும் ; மற்றும்

(ii) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் மூன்று விடயங்களில் (சாதாரண பொது பரீசீலனை தவிர) ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(II) ***வேறு தகைமைகள்.*** - பரீட்சார்த்திகள்,

(i) இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தில் வயது இருபது வருடங்களுக்கு குறையாமலும், வயது ஐம்பது வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் :

* அதற்கிணங்க 1997.06.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக மற்றும் 1967.06.12 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் பிறந்த திகதியில் உள்ளவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கத் தகைமையுள்ளது.

(iii) நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(iv) பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்குரிய போதுமான உடல் மற்றும் உள நலத்துடன் இருத்தல் வேண்டும் ;

(v) நீதிமன்றத்தின் மூலம் ஏதாவதொரு குற்றச்செயலுக்காக குற்றவாளியாக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

*5. விண்ணப்பத்தில் இலக்கம் 01 தொடக்கம் 06 வரையானவை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை 03 மற்றும் 04 ஆம் பக்கங்களிலும் இருக்குமாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப்பத்திரத்தை தமது கையெழுத்தில் பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறே அறிவித்தலில் உட்புகுத்தப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி தள்ளுபடி செய்வதனால், விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கு முன்பதாக அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்கியதாக உள்ளதா எனவும் அனைத்து விபரங்களினையும் உள்ளடக்கியதாக விண்ணப்பப்பத்திரம் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உட்புகுத்தப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என மீண்டும் பரிசீலனை செய்துகொள்ளுதல் வேண்டும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினைத் தன்வசம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமானதாகும்.*

(i) *பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2017.06.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக* **"பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு"** *என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்* ***நொத்தாரிசு ஆரம்பப் பரீட்சை 2016 (2017)*** *எனக் குறிப்பிடல் வேண்டும்.*

(ii) ***போலியான தகவலுக்கான தண்டனை.***- விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்யும் பொழுது மிகவும் கவனமாக சரியான தகவல்களினை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவராவது விண்ணப்பதாரர் பொருத்தமற்றவர் எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் பொழுது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தன்மை இரத்துச்செய்யப்படும் விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொய்யானதெனத் தெரியவரின் அவரைப் பதவியிலிருந்து நீக்க இயலும்.

*6.* ***பரீட்சைகள் கட்டணம்.****- அனைத்துப் பரீட்சார்த்திகளும் 500 ரூபா தொகையினைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்கும் விதத்தில் தீவில் அமைந்துள்ள எந்தவொரு தபால் நிலையத்தில்/உப தபால் நிலையத்தில் பணத்தினைச் செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை அதன் ஒரு ஓரத்தினை விண்ணப்பப்பத்திரத்தின் சரியான இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமானது. பரீட்சைக் கட்டணத்திற்காகப் பணக்கட்டளை அல்லது முத்திரைகள் பொறுப்பேற்கப்படாததுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் எவ்வித காரணத்திற்காகவும் மீளச் செலுத்துவதற்கு அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்பட மாட்டாது.*

*7.* ***ஆளடையாளம்.****- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் ஒவ்வொரு விடயத்திற்காகவும் பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பாளர் எந்நேரமும் திருப்திகொள்ளும் விதத்தில் தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகக் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-*

(i) *ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் ;*
(ii) *செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.*

*7.1 விண்ணப்பப்பத்திரத்தில் மற்றும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவதொரு நிறுவனத்தில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தினை நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரினாலும், அவ்வாறின்றேல் விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், இளைப்பாறிய அலுவலர் பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற அலுவலர் ரூ. 2,40,360 அல்லது அதற்கு அதிகமாக வருடாந்தம் ஒன்றுதிரட்டிய சம்பளத்தினைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவை அல்லது நிரந்தர பதவிநிலை தரத்தில் உள்ள அலுவலர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்குவினால் அல்லது ஏனைய மத பூசைக்குரிய இடத்திற்குப் பொறுப்பான அல்லது பூசகர் திறத்தவர் எனக் கருத்திற்கொள்ளக்கூடிய தன்மையுடையவரான எவராவது ஒருவரினால் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.*

7.2 பரீட்சைக்காகத் தோற்றும் தினத்தில் பரீட்சைகள் நிலையப் பொறுப்பதிகாரியிடம் தமது கையொப்பத்தனை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. பரீட்சைகள் நடாத்தப்படும் அல்லது பெறுபேறுகள் வழங்கப்படுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களினை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சட்டமாக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டி ஏற்படும்.

9. வர்த்தமானியின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமையினை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்னும் பூரணமான முடிவின் பேரில் விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளரினால் பரீட்சை அட்டவணையின் பிரதியுடன் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் உடனடியாக அதுபற்றிக் குறிப்பிட்டுப் பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 தினங்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்கள் வசம் வைத்துள்ள விண்ணபத்தின் பிரதியுடன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதியினையும் விண்ணப்பத்தினை தபாலில் இடும்பொழுது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டுடன் தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரினைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தில் விசாரணையினை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்வதுடன் கொழும்புக்கு வெளியிலான பிரதேசத்தின் விண்ணபதாரியாயின் தங்களது மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் மற்றும் தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட (பரீட்சைகள் அனுமதி அட்டையின் பிரதி தங்களுக்கு தொலைநகல் மூலம் அனுப்புவதற்காக) வேண்டுகோள் கடிதத்தினை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் சமர்ப்பித்தல் மிகவும் பயனுடையதாகும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையினைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளலாகக் கருத்திற்கொள்ளப்படலாகாது.

10. இந்தப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சைக்காக வேண்டப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(i) ***பரீட்சை முறைகள்.***- பரீட்சார்த்திகள் கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்கள் உள்ளடங்கலாக எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் :

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | காலம் (மணித்தியாலங்கள்) | விடய இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | கணிதத் திறன்கள் | 100 | 02 | |
| 2 | கிரகித்தல் | 100 | 02 | |
| 3 | பொது அறிவு | 100 | 01 | |

(ii) ***பரீட்சைத் தாளின் கட்டமைப்பு/விடய சிபாரிசு :***

| பரீட்சைத் தாளின் பெயர் | விடய சிபாரிசு/ கட்டமைப்பு |
|---|---|
| கணிதத் திறன்கள் | க. பொ. த. (சா. த.) மட்டத்திலான கணிதத் திறன்களினை அளவிடும் வினாத்தாளாகும். வினாக்கள் அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும். |
| கிரகித்தல் | பரீட்சார்த்திக்கு உள்ள மொழி ஆற்றல் மற்றும் இலக்கணம் பற்றிய அறிவினைப் பரீட்சிக்கும் வினாப்பத்திரம்- வாக்கிய கட்டுரையினை எழுதுதல், தரப்பட்ட பந்தியின் சாராம்சத்தினை எழுதுதல், தரப்பட்ட பந்தியில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல், தவறாகத் தரப்படும் வாக்கியங்கள் பலவற்றை இலக்கணத்துடன் சரியாகப் எழுதுதுல், தரப்பட்ட வாக்கியங்கள் பலவற்றினைத் தொடர்புபடுத்தி எழுதும் ஆற்றலினை அளவிடல் எதிர்பார்க்கப்படும்.<br><br>வினாக்கள் அனைத்துக்கும் விடையளித்தல் வேண்டும். |

| பரீட்சைத் தாளின் பெயர் | விடய சிபாரிசு/ கட்டமைப்பு |
|---|---|
| பொது அறிவு | பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், அரசாங்கம், விஞ்ஞானம், விளையாட்டு, சுகாதாரம், சட்டம் ஆகிய துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச காலத்திற்கிணங்கிய நிகழ்வுகள் உள்ளடங்கலான பல்வித மற்றும் குறுகிய பதிலினை வழங்கும் மாதிரியிலான வினாக்கள் 50 இனை உள்ளடக்கிய வினாத்தாளாகும்.<br><br>வினாக்கள் அனைத்துக்கும் விடையளித்தல் வேண்டும். |

12. இது சம்பந்தமாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் அல்லது பரீட்சைகள் திணைக்களத்தினால் எவ்வித கருத்தரங்குகள் அல்லது பாடநெறிகள் நடாத்தப்படாதென்பதுடன் வெளி நிறுவனங்களினால் நடாத்தப்படும் எவ்வித கருத்தரங்குகள் அல்லது பாடநெறிகள் சம்பந்தமாக பதிவாளர் நாயகம் திணைக்களம் அல்லது பரீட்சைத் திணைக்களம், எவ்வித பொறுப்பினையும் ஏற்காதென கருத்திற்கொள்ளவும்.

13. சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு விடயத்திற்கும் நியமப்படுத்தப்பட்ட புள்ளிகளில் குறைந்தது நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

14. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தினை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மட்டத்திலான திறமை ஒழுங்கினைத் தெரிவித்து பரீட்சையின் பெறுபெற்று அறிக்கையுடன் பரீட்சை விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பப்படும்.

(i) பரீட்சைக்கு தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளினை அறிவித்தல் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மூலம் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்னும் வெப் தளத்தின் மூலம் நிகழ்த்தப்படும்.

15. தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளின் தகைமைகளினை பரீட்சிப்பதற்காக பதிவாளர் நாயகம் அவர்களினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

16. போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் தேவையான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை பதிவாளர் நாயகத்தினால் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் உறுதிமொழி எழுதுவினைஞராக (Artificial Clerk) இலங்கை உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணிக்கு கடமையாற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

17. இந்த பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழிகளில் பிரசுரிக்கப்படுவதுடன் அம்மொழிகளில் ஏதாவது இணங்காத தன்மை காணப்படுமாயின் சிங்கள மொழியின் கருத்து அதிகாரம் செலுத்துவதாக கருத்திற் கொள்ளல் வேண்டும். இந்த பரீட்சைகள் நடாத்தப்படுவதற்கான சட்ட ஒழுங்குவிதிகள் சம்பந்தமான தீர்மானம் பதிவாளர் நாயகத்தின் தீர்மானமாகும்.

18. இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் இருக்குமாயின் அது சம்பந்தமாக பதிவாளர் நாயகத்தினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரரும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பொதுவான பரீட்சைச் சட்ட திட்டங்களுக்கு இணங்க நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

நீல் டீ அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
பத்தரமுல்லை,
2017, ஏப்பிறல் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நொத்தாரிசு முதனிலைப் பரீட்சை - 2016 (2017)**

Notary's Preliminary Examination - 2016 (2017)

* பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

* வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விண்ணப்பதாரர் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் நகரத்தின் இலக்கத்தினை குறிப்பிடுக. (பரீட்சை நிலையம் அமைந்துள்ள நகரம் மற்றும் நகர இலக்கத்திற்காக அட்டவணை - I இணைப் பார்க்க)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

* இன வர்க்கம் : சிங்களவர் - 1 முஸ்லிம் - 4
இலங்கைத் தமிழர் - 2 பறங்கியர் - 5
இந்தியத் தமிழர் - 3 வேறு - 6

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

01. 1.1 முதல் எழுத்துக்கள் இறுதியில் இடப்பட்ட முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ----.

உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம் மற்றும் தமிழில்) :----.

1.3 முழுப்பெயர் (ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) :----.

1.4 முழுப்பெயர் (சிங்களம் மற்றும் தமிழில்) :----.

02. 2.1 நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர விதிவிட மாவட்டம் :

(அட்டவணை - 1 இற்கிணங்க இலக்கத்தினை இடவும்)

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) :----.

03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

04. பால் :

பெண் - 1
ஆண் - 0

(உரிய இலக்கத்தினை கூட்டில் எழுதவும்)

05. பிறந்த திகதி :

வருடம் : மாதம் : திகதி :

5.1 2017.06.12 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

06. தொலைபேசி இலக்கம் :

07. உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியான திரு. ..................................... என்பவரின் கீழ் பொருந்திப் பயிலுநராக சேவையாற்றுவதற்கு நான் உத்தேசித்துள்ளேன்.

08. நான் தொழில் புரிவதற்கு உத்தேசித்துள்ள வலயம் மற்றும் மொழி என்பன முறையே ........................ (வலயம்) மற்றும் ........... (மொழி) ஆகும்.

09. பரீட்சைக் கட்டணம் :----.

| | |
|---|---|
| (i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலம் | |
| (ii) பற்றுச் சீட்டின் இலக்கமும் திகதியும் | |
| (iii) செலுத்தப்பட்ட தொகை | |

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்

(பற்றுச்சீட்டின் பிரதியொன்று தன்வசம் வைத்துக்கொள்ளவும்)

10. இந்த விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் எனக்கு தெரிந்த வரையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் கௌரவத்துடன் பிரதிக்கினைப்படுத்துகின்றேன். இங்கு ஏதாவது பகுதி பூரணப்படுத்தப்படாமையினால் மற்றும்/அல்லது தவறாக பூர்த்தி செய்யப்பட்டதனால் நிகழும் நட்டத்தினை தாங்கிக் கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும் பிரதிக்கினைப்படுத்துகின்றேன்.

11. என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானவை என உறுதிப்படுத்தப்படுமாயின் நியமனம் பெறுவதற்கு முன்பதாக தகமையற்றவராவேன் எனவும் மற்றும் நியமனம் பெறப்பட்டதன் பின்னர் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கும் உடன்படுகின்றேன்.

12. மேலும் பரீட்சையினை நடாத்தல் மற்றும் பெறுபேற்றினை வழங்கல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சட்டமாக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு உடன்படுவதாக பிரதிக்கினைப்படுத்துகின்றேன்.

13. இங்கு குறிப்பிடப்பட்ட எந்த தகவலும் பின்பு மாற்றப்படமாட்டாது.

14. விண்ணப்பதாரரின் ஒப்பம் :----.

திகதி :----.

விண்ணப்பதாரரின் ஒப்பத்தினை உறுதிப்படுத்தல்

இந்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ................................ ஆந் திகதி அவரின் ஒப்பம் இடப்பட்டதெனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதெனவும் அந்த பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
ஒப்பத்தினை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தவும்).

**அட்டவணை** - I

பரீட்சை மத்திய நிலையம் அமைக்கப்படும் நகரம் மற்றும் நகர இலக்கம்

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | *01* |
| கம்பஹா | *02* |
| களுத்துறை | *03* |
| கண்டி | *04* |
| மாத்தளை | *05* |
| நுவரெலியா | *06* |
| காலி | *07* |
| மாத்தறை | *08* |
| அம்பாந்தோட்டை | *09* |
| யாழ்ப்பாணம் | *10* |
| மன்னார் | *11* |
| வவுனியா | *12* |
| முல்லைத்தீவு | *13* |
| கிளிநொச்சி | *14* |
| மட்டக்களப்பு | *15* |
| அம்பாறை | *16* |
| திருகோணமலை | *17* |
| குருநாகல் | *18* |
| புத்தளம் | *19* |
| அநுராதபுரம் | *20* |
| பொலன்னறுவை | *21* |
| பதுளை | *22* |
| மொனராகலை | *23* |
| இரத்தினபுரி | *24* |
| கேகாலை | *25* |

*05-404*

---

திருத்தம்

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

**இலங்கை நிர்வாகச் சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2016- II மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை, இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2017 (I)**

*2017.04.12* ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட குறித்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் பந்தி *12.8.3* (III), பந்தி *14.2* மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் பந்தி *13* கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகிறது.

(i) பரீட்சை அறிவித்தலில் பந்தி *12.8.3* (III) கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்பட வேண்டும்.

(III) தற்போதைய சர்வதேச பொருளாதார நெருக்கடி நிலையும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஏற்படும் தாக்கமும் (பாட இலக்கம் *23*) *100* - புள்ளிகள்.

தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். (அவ் அப்போதைய சந்தர்ப்பங்களில் ஏற்படும் உலகப் பொருளாதார நிலைமைகளுக்கு காலத்துக்கேற்ற வகையிலான தலைப்புக்களுக்கு உரித்துடைய விடைகளை வழங்குதல் வேண்டும்.)

**குறிப்பு** : இப்பாடத்திற்கு குறைந்தது *40%* புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ii) பரீட்சை அறிவித்தலில் பந்தி 14.2 இன் அட்டவணைக்கு பதிலாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை மாதிரியாக அமைதல் வேண்டும்.

**அட்டவணை**

| | 2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பு | 2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு |
|---|---|---|
| 01. | சட்டம் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | சட்டம் (முதலாம் விளைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 02. | நிர்வாகம் (முதலாம் வினைத்திறக் காண் தடைப் பரீட்சை) | நிர்வாகம் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 03. | பொருளியல் அல்லது சமூகவியல் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகவியல் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 04. | அரச துறையின் நிதியியல் முகாமைத்துவம் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | அரச துறையின் நியதியியல் முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 05. | ஆங்கிலம் (முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | இணைப்பு மொழித் தேர்ச்சி (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 06. | பொருளியில் மற்றும் சமூகவியல் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகவியல் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |
| 07. | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத் திறன் காண் தடைப் பரீட்சை) |
| 08. | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு முறைகள் (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) | முகாமைத்துவத்திற்கான தகவல், தொடர்பாடல் தொழில் நுட்பப் பாவனை (இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை) |

(iii) ஆங்கில அறிவித்தலில் பந்தி 13 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நேர சூசியின் தொடர் இலக்கம் 9 கீழ் குறிப்பிட்டவாறு திருத்தப்பட வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 09 | 2nd Efficiency Bar Examination for officers of Sri Lanka Planning Service | Techniques of Development Planning | 21 | 2017.07.16 | 12.30p.m- 3.30 p. m. |
| | | Basic Macro Economics | 22 | 2017.07.22 | 9.00 a.m- 12.00 p. m. |
| | | Current International Economic Crises and their impact on Sri Lankan Economy | 23 | 2017.07.22 | 12.30p.m- 3.30 p. m. |

**குறிப்பு** :

(அ) இத்திருத்தத்தினால் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை, இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2017 (I) க்காக விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 2017.05.29 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது ;

(ஆ) பரீட்சைக்கு இரண்டாவது முறையாக தோற்றும் அலுவலர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக கீழ்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

(i) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ள அலுவலர்களுக்காக பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக பரீட்சை அறிவித்தலின் 6 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் மேலும் வலுவிலிருப்பதுடன் அதன்படி இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் ஒரு பாடத்துக்கு மட்டும்

விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரியொருவர் இத் திருத்தத்தின் மூலம் மேலுமொரு பாடத்துக்கு விண்ணப்பிப்பதாயின் மேலதிகமாக 500 ரூபா பரீட்சைக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும் ;

(ii) ஏதேனும் ஒரு காரணத்தினால் முன்னைய பரீட்சை அறிவித்தலின்படி இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் பல பாடங்களுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரியொருவர் தற்போது 1,000 ரூபா பரீட்சைக் கட்டணமாக செலுத்தியுள்ளதனால் இத்திருத்தத்தினால் இப்பரீட்சையில் இன்னுமொரு பாடத்திற்கு அல்லது பல பாடங்களுக்கு விண்ணப்பிப்பதாயின் மேலதிகப் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

(இ) வர்த்தமானி அறிவித்தலின்படி தற்போதுவரை இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு (2017-I) விண்ணப்பித்து இத்திருத்தத்தினால் மீண்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியொருவர் இரண்டாவது முறையாகவும் பரீட்சை அனுமதி அட்டையின் பதிவிறக்கம் செய்ய வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் போது இரண்டாவது முறையாக பதிவிறக்கம் செய்த பரீட்சை அனுமதி அட்டையே செல்லுபடியாகும்.

(ஈ) இது தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் ஏற்படின் அது தொடர்பாக தெளிவூட்டல்களை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 011- 5980236 என்ற தொலைபேசி இலக்கத்தில் 2017.05.29 ஆந் திகதி வரை வார அலுவலக நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.15 மணி வரை பெற்றுக்கொள்ளமுடியும்.

(உ) இத்திருத்தத்தினால் பரீட்சை நடைபெறும் திகதியில் எவ்வித மாற்றமும் இல்லை.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2017, மே 4.

5- 576

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.